RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s118

# தேசிய கல்விக் கொள்கையின் முன்னோடி மகாகவி பாரதி

**அ.ர. சத்தியபிரகாஷ்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல்-638183, தமிழ்நாடு, இந்தியா

# Mahakavi Bharathi, The Forerunner of the National Education Policy

**A.R. Sathiyaprakash** [a, *]

[a] Department of Tamil, J.K.K. Nataraja College of Arts & Science, Kumarapalayam, Namakkal-638183, Tamil Nadu, India

* Corresponding Author: tamilmanavansathyaa@gmail.com

Received: 06-08-2021
Revised: 13-07-2022
Accepted: 20-07-2022
Published: 09-09-2022

Check for updates

## ABSTRACT

According to Bharathi's educational ideas, everyone can get an equal status in society through education. He lays down the curriculum to include basic writing, mathematics, history, geography, astronomy, religious-based education, economic education, inquiry-based science, political science, handcraft industry, agriculture, business, physical education, and field trips. He insists that mother tongue education is the best for education. He wants to develop the necessary vocabulary for science subjects. Female education is essential for national liberation. Education should be given to women as equal to men. He says that only then will there be equality. Industry, agriculture, commerce, and many other professions should be taught during education and uplift the community it belongs to. It will also help to uplift this country. As a sign of education, he advises empathy for simplicity, anger for smallness, and making those lower in status equal to him. Education about nationality, legal education, and physical education should be made compulsory. Education should be an expression of students' self-reflection. Bharathiyar has expressed all the above as educational thoughts through his poetry, essays, letters, journals, and lectures. The aim of this article is to show that Bharathi's educational ideas were the forerunners of today's national education policy.

**Keywords:** Bharathiar, Women Education, Bharathiyar Thoughts, National Education

## முன்னுரை

அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டுவதைவிட ஏழைக்குக் கல்வி அளித்தலை தருமம் எனப் போற்றியவன் பாரதி. சிறந்த குடிமக்களையும் அவர்களிடம் சிறந்த உணர்வுகளையும் உருவாக்குதலே பாரதியின் கல்வி நோக்கமாக இருந்தது. கல்வியை, சமுதாயத்தை மாற்றக் கிடைத்த கருவியாக நினைத்தான் பாரதி. பாரதியின் பன்முக தரிசனத்தில் பாரதியின் கல்விக் கொள்கை இன்றைய தேசிய கல்விக் கொள்கையின் முன்னோடியாக இருக்கிறது என்பதைக் கருத்தில் வரைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## தேடு கல்வி

மக்கள் யாவரும் கல்வி பெற வேண்டும் என்பதே பாரதியின் பெருவிருப்பம். கல்வி வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும். தேச கல்விக்குக் குடும்பக் கல்வியே வேர் என்றே வீட்டைக் கலைவிளக்கம் ஆக்குகிறான். அதற்கு வீதிதோறும் மட்டுமல்ல நாடு முற்றிலும் பள்ளிகள் தோன்ற

வேண்டும். கல்வி என்ற சொல்லுக்குக் கல்லுதல் அதாவது தோண்டுதல் என்று பொருள். ஆகவே புதியனவற்றைத் தேடல்தான் கல்வி. எனவே பாரதி 'தேடுகல்வி' என்கிறான். 'முடிந்த முடிவுகளை, அறிந்த தொழிலை மாணவர்களுக்குச் சொல்லாதே அவர்களைத் தேட வைத்தால் போதும்' என்கிறான் பாரதி.

## சமமான கல்வி

கல்வியறிவு மக்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும். அதனால் மக்கள் பண்போடு வாழ்வர் என்பதை 'கல்வி பெற்று பதம் பெற்று வாழ்வார்' என்று குறிக்கிறார். கல்வியின் மூலமே குழந்தைகளுக்கு நீதியும் உயர்ந்த மதியும் வாய்க்கும் என்று பாரதி நம்பினார். பாப்பா பாட்டில் முதலில்

'நீதி தெளிந்தமதி அன்பு - இவை

நிறைய உடையவர்கள் மேலோர்' என்று எழுதினார். பின்னர் அவரே அதனை மாற்றி

'நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு

நிறைய உடையவர்கள் மேலோர்' என்று இவர்களை மட்டுமே மனிதரில் மேலோர் எனக் குறிப்பிடுகிறான் (Visuwanathan, 2007).

## பாரதியின் கல்வித்திட்டம்

பாரதியின் கல்வித்திட்டத்தில் இருக்கின்ற பாடமுறைகள் அனைத்தும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டுமே கொண்டிருப்பதைக் காணலாம்.

(அ) எழுத்து, படிப்பு, கணக்கு

(ஆ) இலேசான சரித்திரப் பாடம்

(இ) பூமி சாஸ்திரம்

(ஈ) மதப் படிப்பு

(உ) ராஜ்ய சாஸ்திரம்

(ஊ) பொருள்நூல்

(எ) சயின்ஸ் அல்லது பௌதிக சாஸ்திரம்

(ஏ) கைத்தொழில், விவசாயம், தோட்டப்பயிற்சி, வியாபாரம்

(ஐ) சரீரப் பயிற்சி

(ஒ) யாத்திரை

நாடு அடிமைப்பட்டுக் கிடக்கும்போது அடிமைத்தனத்தை ஒழிக்க கல்வி மட்டுமே ஆயுதம் என்று கருதியவன் பாரதி. மக்களுக்குச் சமமான கல்வி கிடைத்துவிட்டால் இந்தியாவை உயர்த்திட முடியும் என்று நம்பினான். இழிவைத் துடைத்து சமத்துவத்துடன் ஒருமைப்படுத்துவது கல்வி மட்டுமே என்பதால் 'வாழி கல்வி செல்வம் எய்தி ஒருநிகர் சமானமாக வாழ்வமே' என்கிறான். நமது தேசம் பற்றிய கல்வி, அரசியல் அறிவியல் (political science), பள்ளிகள் பொதுஉடைமை, இலவசக் கல்வி, தாய்மொழிவழிக் கல்வி, பெண்கல்வி, பேதமற்ற மதக் கல்வி, நற்பண்புக் கல்வி, தொழில் கல்வி, உடற்கல்வி (physical education), கல்விப் பயணம் (field trip),செய்து கற்றல் (Learning-by-doing) ஆகியவற்றை தன் கல்வி சார்ந்த சிந்தனைகளாகப் பாரதி தன் கவிதை, கட்டுரை, பத்திரிக்கை மற்றும் கடிதம் வாயிலாக வெளிப்படுத்துகிறான். பாரதியின் தீர்க்க தரிசனமாக அவன் கண்ட கல்விமுறை இப்போது கனிந்துள்ளது. தற்கால தேசிய கல்விக் கொள்கையில் (2020) பாரதியார் குறிப்பிட்ட அனைத்துவகைப் படிப்புகளும் நமது கல்விமுறையில் தனித்தனியே இடம்பெற்றுள்ளன.

## தாய்மொழிக் கல்வி

பாடங்கள் எந்த மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் பாரதிக்கு தெளிவு இருந்தது. 'தேச பாஷையின் மூலமாகவே இந்தச் சரித்திரப் படிப்பு மட்டுமே அன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்' (Thooran, 1979). என்றும் 'கல்வி போதிப்பதற்கு ஒருவனது சொந்தத் தாய் பாஷை மட்டுமே இயற்கையானதும் மனிதப் பண்பிற்கு ஏற்றதுமான போதனா பாஷையாகும்' என்றும் கல்வி கற்க, அவரவர் தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது என்றும் கூறுகிறான் (Valampuri John, 1982). இதனையே தேசிய புதிய கல்விக் கொள்கையும் (2020) வலியுறுத்துகிறது. தான் பயின்ற ஆங்கில வழிக் கல்வியை மண்படுக் கல்வி, பேடிக் கல்வி என்று சாடினார். புனே பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா சொற்பொழிவு நிகழ்த்துகிறபோது இந்த ஆங்கிலக் கல்விமுறை மூலமாக எத்தனையோ கல்வி ஆண்டுகளை இந்திய மாணவர்கள் இழந்துவிட்டார்கள் என்று மகாத்மா காந்தியடிகளும் குறிப்பிட்டார். ஒருவர் எத்தனை மொழிகள் அறிந்துகொண்டாலும் தாய்மொழியைக் கற்காதவரை 'வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ' என விரட்டுகிறார். எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழியில் கற்பிக்க தமிழுக்கு வல்லமை உண்டு. விஞ்ஞானத்தைத் தமிழில் சொல்லிக்கொடுக்கத் தேவையான கலைச்சொற்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஆ.்.ஸிசன், ஹைட்ரஜன் போன்ற சொற்களுக்கு பிராண வாயு, ஜல வாயு எனவும் தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் வடமொழிச் சொற்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என விளக்குகிறார்.

## பெண் கல்வி

பாரதி பெண் விடுதலையை எவ்வளவு வேண்டினாரோ அதே அளவு பெண் கல்வியையும் வேண்டினார். 'தமிழ்நாட்டு மாதர் சம்பூர்ணமான விடுதலை பெற வேண்டுவராயின் அதற்குக் கல்வித்தோணியே பெருந்துணையாம்' என்று நாட்டு விடுதலைக்கும் வீட்டு விடுதலைக்கும் பெண்கல்வி அவசியம் எனக் குறிப்பிடுகிறார் (Tamilaruvi Manian, 2011). 'ஆண் மக்களுக்குச் சமமான கல்வித்திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும்வரை ஆண்மக்கள் பெண் மக்களைத் தக்கபடி மதிக்க மாட்டார்கள்; தாழ்வாகவே நடத்துவார்கள்' என்பது பாரதி வாக்கு.

'பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்

பேதமை அற்றிடும் காணீர்'

பெண்களுக்காகப் பாரதி வகுத்த 10 கட்டளைகளில் ஒன்றாக, சமத்துவம் தோன்றிட இருபாலருக்கும் சமமான உயர்கல்வி வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறான் (Ramanathan, 2016).

## தொழில் கல்வி

பாரதி வகுத்த பாடத்திட்டத்தில் தொழில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கைத்தொழில், விவசாயம், தோட்டப்பயிற்சி, வியாபாரம் முதலியன பள்ளிப் பருவத்திலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்பது பாரதியின் விருப்பம். பயிற்றிப் பலகல்வி தந்து பாரை உயர்த்த வேண்டும் என உணர்த்துகிறான். கைத்தொழில் போற்று, கூடித்தொழில் செய், உலோக நூல் கற்றுணர், வான நூல் பயிற்சிகொள், நீதிநூல் பயில் என்று புதிய ஆத்திச்சூடியில் கூறுவன எல்லாம் இன்று புதுவிதமான கல்வியாக மலர்ந்திருக்கிறது. 'சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு. வியாபாரம் வளர்க யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக. சங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூதநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் தமிழ்நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு' பாரதியின் வார்த்தைகளில், நாட்டுக்குத் தேவையான ஆயுதம் செய்யவும், காகிதம் செய்யவும், தன்னை உயர்த்தவும், நாட்டை உயர்த்தவும் தொழிற்கல்வி அவசியம் என்பதை அறிவிக்கிறான் (Valampuri John, 1982).

## நற்பண்புக் கல்வி

புராணங்கள் பொய் என்றாலும் அவற்றின் கதைகள் மூலமாக பெறப்படும் பண்புகள் முக்கியம். புராணங்கள் சொல்லித்தருகின்ற உண்மைகளை, நீதியை மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும். அதனால் மாணவர்களுக்கு நற்பண்பு தோன்றும். 'நெஞ்சத்து நல்லாம்யாம் எனும் கல்வியழகே அழகு' - பாடல் 131 என மொழிகிறது நாலடியார். கல்வியைக் கற்பதைவிட கற்றபடி நடக்க வேண்டும் (Sithamparanar Sami, 2003).

'கணிதம் பன்னி ரண்டாண்டு பயில்வர்பின்

கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்

அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்

ஆழ்ந் திருக்கும் கவியுளம் காண்கிலார்'

எத்தனை ஆண்டுகள் படித்தாலும் பொருள் விளங்கப் படிக்க வேண்டும் (Ramanathan, 2016). நமது நாட்டின் பெருமைகளையும் சிறப்புகளையும் வரலாற்றையும் அறிந்திருக்க வேண்டும். நீதி நுல்களைப் பயில வேண்டும். ஒருவன் கல்வி கற்றவன் என்பதற்கு அடையாளம் சிறுமை கண்டு பொங்குதலும், ஏழைகள்பால் எளிமை கண்டு இரங்குதலும் ஆகும். இதனை 'நம்மிலும் எளியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டும்' என்று பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கிறார் (Iraiyarasan, 1991). 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற திருமூலர் கூற்றுப்படி உடல் பலம் இல்லாமல் கல்வியைப் பெற முடியாது என்பதால் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். உடல்பலம் உறுதியாக இருக்கும்போது மனபலமும் வாய்க்கும்; கல்வி சிறக்கும் எனத் தெளிவுபடுத்துகிறார்.

## முடிவுரை

'அறிந்திடல், செயலாற்றிடல், இணைந்து வாழ்ந்திடல், தான் சிறந்திடக் கற்றல் ஆகிய விளைவுகளை ஏற்படுத்தினால்தான் புதிய நூற்றாண்டிற்கான கல்வி பயனுள்ளதாக இருக்கும்' என்பது யுனஸ்கோ நிறுவனத்தின் 21 ஆம் நூற்றாண்டின் கல்வி சார்ந்த நான்கு நோக்கங்கள் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிஞராக, கட்டுரையாளராக, பத்திரிக்கை ஆசிரியராக, சொற்பொழிவாளராக, சிந்தனையாளராக, கல்வியாளராக விளங்கிய பாரதியின் கல்விச் சிந்தனைகள் மேற்கண்ட அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. அக்கல்வி முறையில் மாணவர்கள் பல்துறை அறிவைப் பெற்றவர்களாகவும், சுயமாக சிந்திக்கும் திறன், தாய்மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மொழி அறிவு, பொது நலன், உடல் வலிமை, மன வலிமை பெற்றவர்களாகவும் விளங்குவார்கள். மேற்குறிப்பிட்ட அனைத்து உள்ளடக்கங்களையும் உடையதாக கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழு தயாரித்த தேசிய கல்விக் கொள்கை (2020) இருக்கிறது. தேசிய கல்விக் கொள்கையின் முன்மொழிவாக பாரதியின் கல்விக் கொள்கை இருக்கிறது என்பதே இக்கட்டுரை உணர்த்தும் உண்மையாகும்.

## References

Iraiyarasan, (1991) Nallum Porulum, Manimehalai Pirasurum, Chennai, India.

Ramanathan, V., (2016) Mahakavi Bharathiyar Kavithaikal, Chennai, India

Sithamparanar Sami, (2003) Pathenen Keelkanaku Thamilar Valvum, Aarivu Pathipagam, Chennai, India.

Tamilaruvi Manian, (2011) Kanavu Meipada Vendum, Vikadan Pirasuram, Chennai, India.

Thooran, P., (1979) Bharathiyum Thamilagamum, Vanathi Pathippagam, Chennai, India.

Valampuri John, (1982) Bharathi Oru Paarvai, Banupriya Pathippagam, Chennai, India.

Visuwanathan, S., (2007) Kaala Varisai Padutha Patta Bharathi Padaipugal, Model House Lane, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License